# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தச்) சட்டம்

---

*[1988 நவம்பர் மாதம் 24 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1988, நவெம்பர் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.20 தபாற் செலவு : சதம் 75

## 1988 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தச்) சட்டம்

[1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச.வ.—ஓ 18/87
1894

### 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும், 1987 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கச் சட்டத்தால் உட்புகுத்தப்பட்டதுமான) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8ஔ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஔ என்னும் பிரிவைத் திருத்துதல்.**

(1) அதன் (1) ஆம் உட்பிரிவின் "பிரிவு 8ஓ என்பதன்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின்கீழும் அதற்கிணங்கவும் அபிவிருத்தி செய்வதற்கான ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் கட்டடம் நிருமாணிக்கப்படுமிடத்து," என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"(1) பிரிவு 8ஓ என்பதன்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின்கீழும் அதற்கிணங்கவும் அபிவிருத்தி செய்வதற்கான ஏதேனும் இடப்பரப்பில் 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 22ஆ என்னும் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஆதன அபிவிருத்திக் கருத்திட்டமொன்றில் அடங்கியுள்ள ஒரு கட்டடமாகவுள்ள ஏதேனும் கட்டடம் நிருமாணிக்கப்படுமிடத்து, அப்போது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்திலும், நகரசபைகள் கட்டளைச் சட்டத்திலும் உள்ளது எது எப்படியிருப்பினும்—

(அ) அத்தகைய கட்டடத்தின் முதலாவது மதிப்பீட்டுத் தேதியிலிருந்து கணக்கிடப்படும் ஐந்து ஆண்டு காலத்துக்கென, அத்தகைய ஏதேனும் கட்டளைச்சட்டத்தின்கீழ் அத்தகைய கட்டடத்தின்மீது மதிப்பிடப்பட்டதான வீத வரிகளின் எண்பது சதவீதக் குறைப்பொன்று, விடயத்துக்கேற்றவாறு மாநகர சபையினால் அல்லது நகரசபையினால் அனுமதிக்கப்படல் வேண்டும் . அத்துடன் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் கட்டடம் மீள் அபிவிருத்தி செய்யப்படுமிடத்து," என்னும் சொற்களுக்குப் பதிலாக "1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஆட்களுக்குப் புனர்வாழ்

வளித்தல், ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் சட்டத்தின் கருத்துக்குட்பட பாதிக்கப்பட்ட ஆதனமாகவிருக்கும் ஏதேனும் கட்டடம் மீளபிவிருத்தி செய்யப்படுமிடத்து" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்—

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தில் Vஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.

3. பின்வரும் புதிய பாகம் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் V ஆம் பாகத்தை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டத்தின் Vஅ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பாகம் Vஅ

**அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை அல்லது திட்டமொன்றை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அதிகார சபையுடனான கூட்டுமுயற்சி உடன்படிக்கை ஒன்றைப் பின்பற்றி, நிருமாணிக்கப்பட்ட வீடுகள், தொடர்மாடி வீடுகள் மற்றும் வேறு எவையேனும் கட்டிடங்கள் என்பனவற்றின் உடைமையை மீளப் பெறுதல்.**

எவ்வீடுகள், தொடர்மாடி வீடுகள் அல்லது ஏனைய கட்டிடங்களுக்கு இப்பாகம் ஏற்புடையதாகும் என்பது.

19அ. இப்பாகமானது—

(அ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை அல்லது திட்டமொன்றை நிறைவேற்றும் நோக்கத்துக்காக 8(உ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட கூட்டு முயற்சி உடன்படிக்கை ஒன்றைப் பின்பற்றி நிருமாணிக்கப்பட்டு ;

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நாளன்றோ அதற்குப் பின்னரோ, எந்நேரத்திலும், எவரேனும் ஆளுக்கு இருப்பாட்சி செய்வதற்கு அத்தகைய இருப்பாட்சி வியாபார அல்லது வதிவிட நோக்கங்களுக்காக இருந்தாலுஞ்சரி அல்லது வாடகைக் கொடுப்பனவு மீதாக அல்லது வேறு வகையாக இருந்தாலுஞ்சரி கிடைக்கக் கூடியதாகச் செய்யப்பட்டுள்ள,

வீடொவ்வொன்றுக்கும் அல்லது (1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட) பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சி ஆதனத்தின் கூறு ஒவ்வொன்றுக்கும் அல்லது (இதனகத்துப் பின்னர் " கட்டிடம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏனைய கட்டிடம் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

"காணிச் சொந்தக் காரர்", "இருப் பாட்சியாளர்" என்னும் சொல்லமைப் புக்களின் பொருள் கோடல்.

19ஆ. கூட்டு முயற்சி உடன்படிக்கையொன்றைப் பின்பற்றி நிருமாணிக்கப்பட்ட கட்டிடமொன்று மேலே சொல்லப்பட்டவாறு, இருப்பாட்சிக்காக எவரேனும் ஆளுக்குக் கிடைக்கக்கூடியதாக செய்யப்பட்டிருக்குமிடத்து அக்கட்டிடம் தொடர்பாக இப்பாகத்தில் "காணிச் சொந்தக்காரர்" என்னும் சொல்லமைப்பு கூட்டுமுயற்சிக் கம்பனியின் பிரதான நிறைவேற்றுநர் என்றும், இப்பாகத்தில் "இருப்பாட்சியாளர்" என்னும் சொல்லமைப்பு அவ்வாளென்றும் பொருள்படும்.

இப்பாகம் ஏற்புடைய தாகின்ற கட்டிடத்தை விட்டு நீங்கு வதற்கான கடப்பாடு.

19இ. (1) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஏதேனும் கட்டிடத்தின் இருப்பாட்சியாளரும், அவரது தங்கி வாழுநர்களும் அத்தகைய கட்டிடத்தினை இருப்பாட்சி செய்கின்ற ஏனைய ஆளொவ்வொருவரும், அத்தகைய கட்டிடத்தின் இருப்பாட்சியாளரால் இருப்பாட்சியின் சட்டமுறையான முடிவுறுத்துகை செய்யப்பட்ட தேதிக்குப் பின்னர், அத்தகைய கட்டிடத்தை (அல்லது அதன் பகுதியை) இருப்பாட்சி செய்வதற்கு உரித்துடையவர்களாதல் ஆகாது ; அத்துடன் அதற்கிணங்க அத்தேதியன்று இருப்பாட்சியாளர் கட்டிடத்தை விட்டு நீங்கி அதன் உடைமையை அவரது காணிச்சொந்தக்காரருக்கு ஒப்படைத்து அவரது தங்கி வாழுநர்களுடனும் அத்தகைய காணியை அல்லது வளவுகளை இருப்பாட்சி செய்கின்ற ஏனைய ஆளொவ்வொருவருடனும் அத்தகைய கட்டிடம் அமைந்திருக்கின்ற காணியிலிருந்து அல்லது வளவுகளிலிருந்து வெளியேறுதல் வேண்டும்.

(2) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஏதேனும் கட்டிடம், காணிச் சொந்தக்காரரினால் அவரது ஊழியத்தில் உள்ள எவரேனும் ஆளுக்கு இருப்பாட்சி செய்வதற்குக் கிடைக்கச் செய்திருக்குமிடத்து, அவ்வாளின் அத்தகைய கட்டிடத்தின் இருப்பாட்சியானது, இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, அவ்வாளின் ஊழியம் முடிவுறுகின்ற தேதியன்று சட்டமுறையாக முடிவுறுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில் இருப்பாட்சியாளரின் ஊழியமானது அறிவித்தலின்றி முடிவுறுத்தப்படுமிடத்து, அவ

ரது ஊழியத்தின் முடிவுறுகைத் தேதி பற்றிய அவ்வுட்பிரிவிலுள்ள குறிப்பீடு, உண்மையான முடிவுறுத்துகைத் தேதிக்குப் பதினான்கு நாட்களின் பின்னரான தேதி பற்றிய குறிப்பொன்று எனக் கருதப்படுதல் வேண்டும்.

உடைமை மீளப் பெறுதலுக்கும், நைசைக் கட்டளையைச் சேர்ப்பித்தலுக்கும் விண்ணப்பஞ் செய்தல்.

19ஈ. (1) இப்பாகம் ஏற்புடையதாகும் ஏதேனுங் கட்டிடத்தின் இருப்பாட்சியாளர் 19இ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் எவ்விடயத்திலும், கட்டிடத்தின் உடைமையை மீளபெறுதலையும் கட்டிடமானது எக்காணியில் அல்லது எவ்வளவுகளில் அமைந்துள்ளதோ அக்காணி அல்லது வளவுகளிலிருந்து இருப்பாட்சியாளரையும், அவரது தங்கி வாழுநர்களையும் அத்துடன் அத்தகைய காணியை அல்லது வளவுகளை அல்லது ஏதேனும் அதன் பகுதியை இருப்பாட்சி செய்கின்ற ஏனைய ஆளொவ்வொருவரையும் வெளியேற்றுதலையும், வேண்டுகின்ற விண்ணப்பமொன்றைக் கட்டிடமானது எப்பிரிவினுள் அமைந்திருக்கின்றதோ அப்பிரிவின் நீதிவான் நீதிமன்றத்தில் கோப்பிடுதல், காணிச் சொந்தக்காரர்களுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும், இருப்பாட்சியாளரின் இருப்பாட்சி முடிவுறுத்தப்படும் நேரத்தையும், முறையையும் குறிப்பிடும் சத்தியக்கடதாசியொன்றினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், விண்ணப்பத்தின் பிரதியொன்றையும் சத்தியக்கடதாசியின் பிரதியொன்றையும்,

(அ) கட்டளை சேர்ப்பிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் ஒரு பஞ்சாங்க மாதத்துக்குப் பிந்தாத தேதியொன்றாகவுள்ள அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று தோன்றும்படியும் ; அத்துடன்

(ஆ) பத்தொன்பது (இ) என்னும் பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறாக கட்டிடத்தின் உடைமையை அவர் ஒப்படைத்துவிட்டு தங்கிவாழுநர்களுடனும் அத்தகைய காணியை அல்லது வளவுகளை அல்லது அதன் ஏதேனும் பகுதியை இருப்பாட்சி செய்கின்ற ஏனைய ஆள் ஒவ்வொருவருடனும் கட்டிடம் அமைந்துள்ள காணியிலிருந்தும், வளவுகளிலிருந்தும் ஏன் வெளியேறக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறும்,

இருப்பாட்சியாளரைத் தேவைப்படுத்தும் நைசைக் கட்டளையொன்றையும் அவருக்குச் சேர்ப்பித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான நைசைக் கட்டளையொன்று இருப்பாட்சியாளருக்கு பிசுக்காலினால் அல்லது பிசுக்காலினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் சேர்ப்பிக்கப்பட்டிருந்தால் அல்லது அது அவ்வாறு சேர்ப்பிக்கப்பட முடியாதிருக்குமிடத்து, பிசுக்காலினால் அல்லது மேலே சொல்லப்பட்டவாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால், கட்டளை எக்கட்டிடம் தொடர்பானதோ அக்கட்டிடத்தின் துலாம்பரமான ஏதேனும் பகுதியில் ஒட்டப்பட்டிருந்தால் அந்நைசைக் கட்டளையானது அவருக்குச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

**விசாரணையை ஒத்திவைத்தல்.**

19உ. (1) இப்பாகத்தின்கீழ் நைசைக் கட்டளையொன்று எவ்விருப்பாட்சியாளருக்குச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அவ்விருப்பாட்சியாளர், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, சத்தியக்கடதாசிமூலம் அல்லது சத்தியத்தின் மீதான கூற்றின்மூலம் அல்லது உறுதியுரைமூலம் நீதிமன்றத்தின் கருத்தின்படி விசாரணையை ஒத்திவைத்தலை அவசியமாக்குகின்ற, ஏதேனும் எதிர்வாதத்தை எழுப்பினால், நீதிமன்றம் எழுப்பப்பட்ட வழக்குப் பிரச்சனையை அல்லது வழக்குப் பிரச்சனைகளை உடனடியாகத் தொகுத்துப் பதிவுசெய்தல் வேண்டும். அத்துடன் விடயத்தின் சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு, சான்றை விசாரிப்பதற்கான தேதியொன்றை, எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவில் நியமித்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய விடயத்தில் அதன்மேல் நீதிமன்றப் பதிவாளர், கட்சிக்காரரால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய கட்சிக்காரர் ஒவ்வொருவருக்கும். அழைப்புக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அவரது தோற்றுகையைக் கட்டாயப்படுத்தும், அழைப்புக் கட்டளையை வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் வழக்கினை விசாரிப்பதற்கான தேதி நியமிக்கப்பட்டிருக்குமிடத்து,

(அ) வழக்குக்கான எல்லாக் கட்சிக்காரரும் அத்தகைய ஒத்திவைப்புக்கு இணங்கினாலன்றி ; அல்லது

(ஆ) இருப்பாட்சியாளர் அல்லது வழக்குக்கான வாதப் பொருளாகவுள்ள நிகழ்வுகளை அறிந்தவரும், எண்பிக்க இயலுமானவரும் ஆன சாட்சிக்காரர், கூட்டுச்சதி அல்லாமல் வேறு வகையில் வராமை காரணமாக அத்தகைய ஒத்தி

வைத்தல் அவசியமானதென சத்தியத்தின் மூலம் அல்லது உறுதியுரைமூலம் அல்லது சத்தியக்கடதாசி மூலம் கொடுக்கப்பட்ட சான்றின்மீது, நீதிமன்றம் திருப்தியடைந்தாலன்றி,

விசாரணையானது ஏதேனும் பிந்திய தேதிக்கு மீளவும் ஒத்திவைக்கப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ், வழக்கை விளங்குவதற்காக நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய விளக்கம் எத்தேதிக்குத் தள்ளிவைக்கப்படக்கூடியதோ அத்தகைய ஏதேனும் வேறு தேதியன்று எழுப்பப்பட்ட வழக்குப் பிரச்சினைகளை விளங்கித் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், அரசியலமைப்புத் தவிர்ந்த வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணுகை எது எவ்வாறிருப்பினும் அதன்மேல் தீர்ப்பை வழங்குதலும் வேண்டும்.

உடைமையை ஒப்படைத்தலுக்கான எழுத்தாணை வழங்குதலும் அதை நிறைவேற்றுதலும்.

19ஊ. (1) இப்பாகத்தின்கீழ் நைசைக் கட்டளையொன்று எவ்விருப்பாட்சியாளரின்மீது சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அவ்விருப்பாட்சியாளர், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது இப்பாகத்தின்கீழ் விளக்கமானது தள்ளிவைக்கப்பட்டுள்ள ஏதேனும் தேதி இருந்தால், அத்தகைய வேறு தேதியன்று வருகைதராதுவிடின் அல்லது வருகைதந்து; 19இ என்னும் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டிடத்தின் உடைமையை அவர் ஏன் ஒப்படைத்தல் கூடாதென்பதற்கும் அவரது தங்கிவாழுநர்களுடனும் அக்கட்டிடம் அமைந்திருக்கும் அத்தகைய காணியை அல்லது வளவுகளை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை இருப்பாட்சி செய்யும் ஏனைய ஆளொவ்வொருவருடனும் காணிகளிலிருந்தும் வளவுகளிலிருந்தும் ஏன் வெளியேறக்கூடாது என்பதற்கும் சிறந்த வலிதான காரணத்தைக் காட்டத் தவறினால் அல்லது 19உ (3) என்னும் பிரிவின்கீழ் இருப்பாட்சியாளருக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்குமிடத்து, நைசைக் கட்டளை இறுதிக்கட்டளையாக ஆக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய எழுத்தாணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு பஞ்சாங்க மாதங்களுக்கு முந்தாததும் இரண்டு பஞ்சாங்க மாதங்களுக்குப் பிந்தாததுமான எழுத்தாணையில் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்கு முன்னர் காணிச் சொந்தக்காரருக்கு அல்லது அந்நோக்கத்துக்காகக் காணிச் சொந்தக்காரரினால் எழுத்தில் நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்குக் கட்டிடத்தின் உடைமையை ஒப்படைக்குமாறும் அத்துடன் எக்காணியில் அல்லது வளவுகளில் கட்டிடமானது அமைந்திருக்கின்றதோ அக்காணியிலிருந்து அல்லது வளவுகளிலிருந்து

இருப்பாட்சியாளரையும் அவரது தங்கிவாழுநர்களையும் அத்தகைய காணியை அல்லது வளவுகளை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை இருப்பாட்சி செய்கின்ற வேறு ஆளொவ்வொருவரையும் வெளியேற்றுமாறும் தேவைப்படுத்துகின்றதும், அதிகாரமளிப்பதுமான உடைமை எழுத்தாணையை பிசுக்காலுக்கு உடனடியாக வழங்குதல் வேண்டும். அத்துடன் அவசியமானுல், மீள வழங்குதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், எழுத்தாணை வழங்குதல் ஒத்திவைக்கப்படுதல் வேண்டுமென்பது, இதனகத்துப் பின்னர் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறுன, ஏதேனும் நியாயமான காரணத்துக்காக உகந்தது என நீதிமன்றம் திருப்திப்பட்டுள்ளவிடத்து, அதன்சார்பில் நீதிமன்றத்தினுல் குறித்துரைக்கப்படும் தேதிக்கு முன்னர் இருப்பாட்சியாளர் கட்டிடத்தின் உடைமையை ஒப்படைத்துவிட்டு, அவரது தங்கிவாழுநர்களுடனும் அத்தகைய காணியை அல்லது வளவுகளை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை இருப்பாட்சி செய்கின்றபோது வேறு ஆளொவ்வொருவருடனும் அத்தகைய காணியிலிருந்து அல்லது வளவுகளிலிருந்து வெளியேறத்தவறினுல் அன்றி, நீதிமன்றமானது அத்தகைய எழுத்தாணை வழங்கப்படுதல் ஆகாது எனப் பணிக்கலாம்.

(2) முற்போந்த காப்பு வாசகத்தில் , "நியாயமான காரணம்" என்பது பின்வருமாறு பொருள்படும் :—

(அ) இருப்பாட்சியாளரின் அல்லது அவரது எவரேனும் தங்கிவாழுநரின் சுகயீனம் ; அல்லது

(ஆ) பத்தொன்பது (இ) என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில், காணிச் சொந்தக்காரர் இருப்பாட்சியாளருக்கு சட்டமுறையாக வருமதியான எவையேனும் கூலிகளைச் செலுத்த அல்லது ஊழியர் என்ற அவரது தகைமையில் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் காணிச் சொந்தக்காரரிடமிருந்து பெறுவதற்கு அவர் உரித்துடையவராக இருக்கும் எவையேனும் நன்மைகளை அல்லது சிறப்புரிமைகளை அவருக்கு வழங்குவதற்கு காணிச் சொந்தக்காரர் தவறுதல் ; அல்லது

(இ) காணிச் சொந்தக்காரர் என்ற தன்மையில் இருப்பாட்சியாளருக்கு முறையாக வழங்கப்படவேண்டிய ஏதேனும் விலக்கற் சான்றிதழை அல்லது ஆளடையாளச் சான்றிதழை அவருக்கு வழங்கத் தவறுதல் ; அல்லது

(ஈ) குறித்த சில எண்ணிக்கையான குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவுகளைச் செய்தபின்னர், இருப்பாட்சியாளரைச் சொந்தக்காரராக உரித்தாக்கும் நியதிகளின்மீது கட்டிடமானது, இருப்பாட்சி செய்வதற்குக் கிடைக்கக்கூடியதாக ஆக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், காணிச் சொந்தக்காரருக்கும் இருப்பாட்சியாளருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டில், அவரது இருப்பாட்சி முடிவுறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் எப் பணத்தொகையை கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவோ அப்பணத்தொகையெதனையும் காணிச் சொந்தக்காரர், இருப்பாட்சியாளருக்கு மீள் கொடுப்பனவு செய்யத்தவறுதல்.

**வாடகையை அறவிடுதல்.**

19எ. (1) இருப்பாட்சியாளர், கட்டிடம் தொடர்பான வாடகைக் கொடுப்பனவுமீது தவறுகை செய்யுமிடத்து காணிச் சொந்தக்காரர், வாடகையாக அல்லது வேறு கொடுப்பனவாக வருமதியாகவுள்ள தொகையையும், இருப்பாட்சியாளரின் பெயரையும், வதிவிடத்தையும் கூறும் சான்றிதழொன்றை, கட்டிடமானது எப்பிரிவில் அமைந்துள்ளதோ அப்பிரிவில் நியாயாதிக்கமுடைய நீதிவானுக்கு வழங்கலாம். அதன்மேல் நீதிவான், வாடகையாக அல்லது வேறு கொடுப்பனவாக வருமதியாகவுள்ள தொகையை அறவிடுவதற்கு அவருக்கெதிராக மேலும் நடவடிக்கைகளை ஏன் எடுக்கக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இருப்பாட்சியாளரைத் தமக்கு முன் கட்டளையிட்டழைத்தல் வேண்டும். அத்துடன் அவர் போதுமான காரணம் காட்டத்தவறுமிடத்து, வாடகையாக அல்லது வேறு கொடுப்பனவாக வருமதியாகவுள்ள தொகையானது, மறியற்றண்டனையினுல் தண்டிக்கப்படற்பாலதானதற்றதும் குற்றப்பணத்தினுல் மட்டும் தண்டிக்கப்படற்பாலதானதுமான தவறென்றுக்கு, அத்தகைய இருப்பாட்சியாளர்மீது, நீதிவானின் தண்டனைத் தீர்ப்பொன்றினுல் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றுகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய தவறென்றுக்கு விதிக்கப்பட்ட குற்றப்பணத்தைச் செலுத்துவதில் ஏற்பட்ட தவறுகை தொடர்பாக, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின், 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அதன் (அ), (ஈ), (ஐ) என்னும் பந்திகள் தவிர்ந்தவை) ஏற்பாடுகள் அதன்மேல் ஏற்புடையனதா

தல் வேண்டும். அத்துடன், நீதிவான், அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளினுல், அத்தகைய தண்டனைத் தீர்ப்பை விதிக்கும் நேரத்தில் அவர் ஆக்கியிருக்கக்கூடிய ஏதேனும் பணிப்புரையை ஆக்கலாம்.

(2) காணிச் சொந்தக்காரரின் சான்றிதழானது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தொகையானது கட்டிடத்துக்கான வாடகையாக அல்லது வேறு கொடுப்பனவாக வருமதியாகவுள்ளதென்பதற்கு முதற்தோற்றளவிலான சான்றுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினுல் அறவிடப்பட்ட தொகை ஒவ்வொன்றும் காணிச் சொந்தக்காரருக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

(4) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (2) முதல் (5) வரையிலான, உட்பிரிவிலுள்ள எதுவும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடயத்துக்கு ஏற்புடையதாதலாகாது.

(5) ஓராம் உட்பிரிவினுல் இருப்பாட்சியாளர்மீது விதிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் குற்றப்பணக் கொடுப்பனவின் தவறுகைக்காக, அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு அவர் மறியற்றண்டனைக்குத் தண்டனைத் தீர்பளிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், நீதிவான் அக்குற்றப்பணத்தொகையின் கொடுப்பனவுக்காக கால அவகாசத்தை அனுமதிக்கலாம் அல்லது அத்தொகையின் கொடுப்பனவு, தவணைப் பணங்களில் செய்யப்படவேண்டுமென்று பணிக்கலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ், கொடுப்பனவொன்று தவணைப்பணங்களில் செய்யப்படவேண்டுமென்று நீதிவானெருவர் பணிக்குமிடத்து, ஏதேனும் ஒரு தவணைப் பணக் கொடுப்பனவில் தவறுகை ஏற்படின், அப்போது செலுத்தப்படாது எஞ்சியிருக்கும் எல்லாத் தவணைப் பணங்களின் கொடுப்பனவிலும் தவறுகை ஏற்பட்டுள்ளதென்றுற் போன்று நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

(7) வாடகையாக அல்லது வேறு கொடுப்பனவாக வருமதியாகவுள்ள ஏதேனும் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள், காணிச் சொந்தக்காரரினுல் அல்லது அதற்கென காணிச் சொந்தக்காரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினுல் தொடரப்படலாம். அத்துடன் காணிச் சொந்தக்காரர் அல்லது அத்தகைய ஆள் எழுத்திலான வேறு ஏதேனும்சட்டத்தில் முரணுகை உள்ளது, எது எவ்வாறிருப்பினும், அத்தகைய நடவடிக்கைகளை நடத்தலாம்.

மேன்முறை யீடு.

19ஏ. (1) நீதிவான் நீதிமன்றமொன்றினால் பத்தொன்பது உ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது 19ஊ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கட்டளைமீது அதிருப்தியடைந்துள்ள ஆளெவரும், அத்தகைய கட்டளைத் தேதியிலிருந்து பதினன்கு நாட்காலம் முடிவடைவதற்கு முன்னர், அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக் கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 321, 322 (1), 322 (2), 324, 325, 326, 328 (இ), 329, 330 என்னும் பிரிவுகள், ஏற்ற மாற்றங்களுடன், இப்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றை சமர்ப்பித்தலுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இப்பாகம் ஏற்புடையதாகின்ற கட்டிடங்களிலிருந்து வெளியேற்றுவதற்கான எல்லா வழக்குகளுக்கும் புறநீங்கலாக ஏற்புடைத்தாதல்.

19ஐ. இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஏதேனும் கட்டிடத்தின் உடைமையை மீளப் பெறுவதற்கு அல்லது கட்டிடம் எக்காணியில் அல்லது வளவுகளில் அமைந்துள்ளதோ, அக்காணியிலிருந்து அல்லது வளவுகளிலிருந்து இருப்பாட்சியாளரை வெளியேற்றுவதற்கு, இப்பாகத்தின் ஏற்பாடுகளின் கீழல்லாது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதலாகாது.

முத்திரைத் தீர்வைகள்.

19ஒ. இப்பாகத்தின் கீழான நடவடிக்கைகள் தொடர்பாக 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் ஏற்பாடுகளினதும், இப்பாகத்தின் கீழான செலவு இறுப்பனவுகள் தொடர்பான குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளினதும் பிரயோகத்தின் நோக்கத்துக்காக, இப்பாகத்தின் கீழான நடவடிக்கைகள் ஐம்பது ரூபா பெறுமதியான பண வழக்கொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், 19ஈ என்பதன் கீழான விண்ணப்பமொன்று, அப்பெறுமதியையுடைய கடனொன்றை அறவிடுவதற்கான குடியியல் நடவடிக்கை ஒன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

அதிகாரசபையின் தவிசாளரினால் சான்றிதழ் வழங்கப்படுதல்.

19ஓ. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டத்தை அல்லது திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்துக்காகச் சான்றிதழில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளுடன் கூட்டு முயற்சி உடன்படிக்கை ஒன்றை அதிகாரசபை செய்து கொண்டுள்ளதெனவும் அந்தச்

சான்றிதழில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டிடம் அத்தகைய உடன்படிக்கையைப் பின்பற்றி அத்தகைய ஆளினால் கட்டி முடிக்கப்பட்டதெனவும், அத்தகைய கூட்டுமுயற்சியின் பிரதான நிறைவேற்று அலுவலரின் பெயரைக் கூறுவதும் ஆன பயனைக்கொண்டிருக்கும் அதிகாரசபைத் தவிசாளரின் கைப்பட்ட சான்றிதழொன்று இப்பாகத்தின் கீழுள்ள ஏதேனும் சட்ட நடவடிக்கைகளில் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன் அதற்கான கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.".

4. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும் 1979 நவம்பர் 12 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்.